செய்தி வெளியீடு எண்:282 நாள்:16.06.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்களின் தலைமையில் இன்று (16.06.2021) கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் அனைத்து இரகங்களின் விற்பனையினை மேம்படுத்த விற்பனையாளர்களுக்கு விற்பனை மேம்பாடு குறித்த பயிற்சி கோவை சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச பயிற்சி நிலையம் மூலமாக இணையவழியில் நடத்தப்படும் பயிற்சி வகுப்பினை மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கட்டுப்பாட்டில் 1134 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் துணிநூல் இரகங்கள் கோ—ஆப்டெக்ஸ் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணி இரகங்களை தேக்கமடையாமல் விற்பனை செய்வதை உறுதி செய்வதற்கும், விற்பனை திறனை மேம்படுத்துவதற்கும், வாடிக்கையாளர்களை இன்முகத்தோடு வரவேற்று, வாடிக்கையாளர்களின் விருப்பத்தினை அறிந்து அவர்கள் எதிர்பார்க்கும் இரகங்களை காட்சிபடுத்தவும், விற்பனை செய்யப்படும் இரகங்கள் மற்றும் அதன் சிறப்புகள் குறித்து சரளமாக வாடிக்கையாளர்களுக்கு எடுத்துரைப்பது, வாடிக்கையாளர்கள் திருப்தியடையும் வகையில் விற்பனை மேற்கொள்வது போன்ற விற்பனை யுக்திகளை மேம்படுத்துவது குறித்து இக்கூட்டுறவு சங்கங்களில் விற்பனையாளராக பணிபுரியும் சுமார் 350 விற்பனையாளர்களுக்கு பயிற்சி வழங்க அரசால் முடிவு செய்யப்பட்டு முதற்கட்டமாக காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், திருவண்ணாமலை, பரமக்குடி, திருப்பூர், திருச்செங்கோடு, கடலூர் மற்றும் திருவாரூர் ஆகிய

சரகங்களில் உள்ள 116 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை சார்ந்த 170 விற்பனையாளர்களுக்கு ரூ.12,03,600/– செலவில் 16.06.2021 முதல் 06.07.2021 வரை 5 பிரிவுகளாக பயிற்சி வழங்க திட்டம் வகுக்கப்பட்டு பயிற்சி துவங்கி உள்ளது.

இப்பயிற்சி வகுப்பினை உரிய முறையில் பயன்படுத்தி, விற்பனை மேம்பாடு குறித்த சந்தேகங்களை கேட்டறிந்து பயிற்சியின் முடிவில் விற்பனையாளர்கள் அவர்களின் விற்பனை திறனை மேம்படுத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் இருப்பினை குறைத்து விற்பனையினை அதிகரித்து இலாபத்தை அதிகரிக்கும் வகையில் தங்களது பங்களிப்பை செலுத்திட பயிற்சியில் கலந்து கொண்ட விற்பனையாளர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

இப்பயிற்சி துவக்க உரையில் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., அரசு முதன்மை செயலர் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை, டாக்டர் (திருமதி) பீலா ராஜேஷ், இ.ஆ.ப., முதன்மை செயலர்/கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் இணையம் வாயிலாக கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**